இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 21-08-2024

# அத்திக்கடவு - அவிநாசி திட்டம் யாரால்? - 1

**அத்திக்கடவு - அவிநாசி திட்டத்துக்கும் அண்ணாமலைக்கும் என்ன சம்பந்தம்? காக்கா உட்கார பனம்பழம் விழுந்த கதை என்பார்கள்! அப்படிக்கூட அல்ல, பனம்பழம் விழப்போவது தெரிந்து உட்கார்ந்து, பனம் பழத்தோடு சேர்ந்து விழுந்த கதை அவருடையது!**

அண்ணாமலை போராட்டம் அறிவித்தாராம். அதனால்தான், அத்திக்கடவு – அவிநாசி திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கினார்களாம். அத்திக்கடவு – அவிநாசி திட்டம் என்பது சாலைகளில் நிழற்குடை அமைப்பதைப் போல ஒரு நாள் இரவில் செய்துவிடும் திட்டமல்ல. இவர் போராட்டம் அறிவித்ததும் திறந்து விடுவதற்கு. அண்ணாமலை அப்படித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறார் போலும்!

ஆகஸ்ட் 17 அன்று அத்திக்கடவு – அவிநாசி திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்கள். தொடங்கி வைத்துவிட்டதால் தனது போராட்டம் ரத்து என்று அறிவித்துள்ளார் அண்ணாமலை.

**“22.7.2024 ஆம் தேதி அன்று தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்தபோது, ‘அத்திக்கடவு – அவிநாசி திட்டம் முடிவுற்று விட்டது. உபரி நீர் வரத் தொடங்கியதும் திறந்துவிடலாம். அநேகமாக ஆகஸ்ட் 15 க்குப் பிறகு தொடக்கி வைத்துவிடலாம்’ என்று சொன்னார்கள். திட்டத்தை தொடங்கப் போகிறார்கள் என்பதை தெரிந்து வைத்துக் கொண்டு போராட்டம் அறிவித்தார் அண்ணாமலை”** என்று உடைத்துவிட்டார் கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சித் தலைவர் ஈஸ்வரன்.

ஒரு மாதத்துக்கு முன் தேதி திட்டமிடப்பட்டு விழா ஏற்பாடுகள் நடந்து வருவதை தெரிந்து கொண்டு போராட்டம் அறிவித்தார் அண்ணாமலை. இவர் இப்படி என்றால், பழனிசாமி என்ன சொல்கிறார் என்றால், ‘இரண்டரை ஆண்டு காலம் தாமதமாக இத்திட்டத்தை திறந்துள்ளார்கள்’ என்கிறார். இந்த தாமதம் எதனால் வந்தது? பழனிசாமி, இதற்கான நிதியை மொத்தமாக ஒதுக்கினாரா? என்றால் இல்லை!

**90 விழுக்காடு பணிகளை அ.தி.மு.க. ஆட்சியில் முடித்து விட்டதாக பழனிசாமி பொய் சொல்லி இருக்கிறார். தி.மு.க. ஆட்சிக்கு வருவதற்கு முன்பு 67 விழுக்காடு பணிகள்தான் முடிவுற்றுள்ளது என்று இத்திட்டப் பொறியாளர் சிவலிங்கம் பேட்டி தந்துள்ளார்.**

**( 2021 பிப்ரவரி 3) 50 விழுக்காடு பணிகள் முடிவுற்றதாக டிசம்பர் 2020 அன்று அறிவித்துள்ளார்கள். பச்சைப் பொய் பழனிசாமியின் குணம் தோற்ற பிறகும் மாறவில்லை.**

**திட்டத்துக்குத் தேவையான நிதியை முழுமையாக ஒதுக்கியும், நிலம் கையகப்படுத்துவதில் இருந்த பிரச்சினையை தீர்த்தும் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றிக் காட்டியதுதான் இன்றைய முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களின் சாதனை ஆகும்.**

கோவை, ஈரோடு, திருப்பூர் மாவட்டத்து மக்களின் பல்லாண்டு கனவுத் திட்டம் இது. ஈரோடு,கோவை திருப்பூர் மாவட்டத்தில் வறட்சி மிகுந்த பகுதிகளில் உள்ள குளம், குட்டை, ஏரிகளில் தண்ணீர் நிரப்பி நிலத்தடி நீர் செறிவூட்டும் திட்டமாக இது அமைந்துள்ளது. மழைக் காலங்களில் ஏற்படும் வெள்ளப் பெருக்கின் போது ஆற்றில் வீணாகும் தண்ணீரை வறட்சி பகுதிகளுக்குக் கொண்டு செல்லும் வகையில் அத்திக்கடவு – அவினாசி திட்டம் உருவாக்கப்பட்டது.

* பெருந்தலைவர் காமராஜர் முதல்-அமைச்சராக இருந்த போது 1957-ம் ஆண்டு முதன் முதலில் விவசாயிகள் கோரிக்கை வைத்தனர். ஆனால் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக வந்த பிறகுதான் அதற்கு கொள்கை வடிவம் கொடுத்தார்.

* 1972-ஆம் ஆண்டு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் கொள்கை ரீதியாக ஏற்கப்பட்ட திட்டம்தான் அத்திக்கடவு – அவிநாசி திட்டம். அதற்கு முன்பு எல்லாம் இதற்கு ‘பவானி திட்டம்’ என்றுதான் பெயர். அதனை அத்திக்கடவு – அவிநாசி திட்டமாக பெயர் சூட்டியவரே கலைஞர்தான். அடுத்து வந்த அ.தி.மு.க. ஆட்சி அதற்கு எதுவும் செய்யவில்லை.

* 1990-ஆம் ஆண்டு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அதனை செயல்படுத்தும் முயற்சி எடுத்தபோது, ஆட்சி கலைக்கப்பட்டது. அடுத்து வந்த அ.தி.மு.க. ஆட்சியும் அத்திக்கடவு – அவிநாசித் திட்டத்திற்காக எதுவுமே செய்யவில்லை.

* 1996-ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த தலைவர் கலைஞர் அவர்கள் இத்திட்டத்தின் முதல்கட்டமாக கோவைக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்தை செயல்படுத்தினார்கள். அதன்பிறகு ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க. அரசு அடுத்தகட்ட பணிகளைச் செய்யவில்லை.

* 2006-ஆம் ஆண்டு அத்திக்கடவு பேஸ் 2 திட்டத்தை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் செயல்படுத்தினார். சரவணம்பட்டி அருகில் பிரதான சென்ட்ரல் வாட்டர் டேங்க் கட்டப்பட்டது. கோவை முழுவதும் குழாய்கள் பதிக்கப்பட்டது. ஒன்றிய அரசின் ஒப்புதலுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. உலக வங்கி, நபார்டு வங்கி, ஜப்பான் வங்கி ஆகியவை கடன் தர முன்வந்தன. ஆட்சி மாறியது. அடுத்து வந்த அ.தி.மு.க. ஆட்சி எதுவும் செய்யவில்லை.

* அத்திக்கடவு குடிநீர் வழங்கலையே முடக்கி விட்டார்கள். 2012-ஆம் ஆண்டு ஒன்றிய அரசிடம் இருந்து கடிதம் வந்தது. ஆனாலும் அ.தி.மு.க. அரசு எந்த முயற்சியும் செய்யவில்லை. திட்டத்திற்கான நிலத்தை கையகப்படுத்த எந்த முயற்சியும் செய்யவில்லை.

*தொடரும்*



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (19.8.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளராகப் பொறுப்பேற்றுக் கொண்ட நா.முருகானந்தம் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



தலைமைச் செயலகத்தில், நேற்று முன்தினம் (19.8.2024) தமிழ்நாடு அரசின் புதிய தலைமைச் செயலாளராக நா.முருகானந்தம் பொறுப்பேற்றுக் கொண்டார்.

### திருவான்மியூர் முதல் உத்தண்டி வரை உயர் மட்டச் சாலை அமைத்திட அரசு பரிசீலனை!

## கிழக்குக் கடற்கரைச் சாலையில் நடைபெறும் சாலைப் பணிகள்!

### பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!



சென்னை, ஆக. 21 -

கிழக்குக் கடற்கரைச் சாலையில் நடைப்பெற்று வரும் சாலைப் பணிகள் தொடர்பாக, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (19.8.2024) நேரடியாக களஆய்வு மேற்கொண்டார்.

சென்னை மாநகரின் பிரதான நுழைவாயில் சாலைகளில் ஒன்றான கிழக்கு கடற்கரை சாலையின் போக்குவரத்து நெரிசலினைக் குறைக்கும் வகையில், திருவான்மியூர் முதல் உத்தண்டி வரை உயர் மட்ட சாலை மேம்பாலம் கட்டுவது குறித்து 2024 - 2025 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில், முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு, அறிவிப்பு வெளியிடப்பட்டது.

திருவான்மியூர் முதல் உத்தண்டி வரையிலான சாலை 15 கிலோ மீட்டர் நீளம் கொண்டது. இச்சாலைப் பகுதியில் 17 போக்குவரத்து சிக்னல்கள் உள்ளன. எனவே, இச்சாலையை கடக்க சுமார் 45 நிமிடங்கள் முதல் 60 நிமிடங்கள் வரை ஆகிறது. இச்சாலையில் தற்பொழுது 69,000 வாகனங்கள் நாளொன்றுக்கு செல்கின்றன. திருவான்மியூர் முதல் உத்தண்டி வரையிலான 15 கிலோ மீட்டர் தூரத்தில், சாலையின் இருபுறத்திலும் 347 சிறுசாலைகள் / தெருக்கள் உள்ளன.

எனவே இச்சாலையை எவ்வளவு அகலப்படுத்தினாலும், அதிகமான வாகனப் போக்குவரத்தின் காரணமாக, போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, திருவான்மியூர் முதல் உத்தண்டி வரை உயர் மட்டச் சாலை அமைப்பதற்கான கருத்துரு தயாரிக்கப்பட்டு, அரசு பரிசீலனை செய்து வருகிறது.

கட்டப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள உயர்மட்ட பாலம் டைடல் பூங்கா சந்திப்பில் துவங்கி எல்பி சாலைச் சந்திப்பு, கொட்டிவாக்கம், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம் அக்கரை வழியாக உத்தண்டியில் முடிவடையும். இப்பகுதி வாழ் பொதுமக்களின்தேவை கருதி, எல்பி சாலைச் சந்திப்பு, திருவான்மியூர் ஆர்டிஓ ஆபீஸ், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம் மற்றும் அக்கரைச் சந்திப்பில் பாலத்தில் ஏறி அல்லது இறங்கிச் செல்லும் வகையில் வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது.

இப்பாலத்தின் மூலம் இப்பகுதியை 20 நிமிடங்களில் கடக்க இயலும். தற்போதைய ஆறு வழிச்சாலை அமைக்க நில எடுப்பு செய்யப்பட்டு வருகிறது. கூடுதல் நில எடுப்பு ஏதும் மேற்கொள்ளாமல், 18 மாதங்களுக்குள் இந்த சாலை மேம்பாலத்தை கட்டி முடிக்க வேண்டும்.

சென்னை மாநகரில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் பொருட்டு, சென்னையில் செயல்படுத்தப்பட்டு வரும் முக்கிய திட்டங்களில் ஒன்றான “கிழக்கு கடற்கரை சாலையை“ திருவான்மியூர் முதல் அக்கரை வரை ஆறுவழித் தடமாக அகலப்படுத்தும் பணிகள் குறித்து ஆய்வு செய்தார்கள்.

கிழக்குக் கடற்கரைச் சாலை, சென்னை பெருநகர், திருவான்மியூர், மாமல்லபுரம், புதுச்சேரி, சிதம்பரம், சீர்காழி, நாகப்பட்டினம், திருத்துறைப்பூண்டி, இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி வழியாக, கன்னியாகுமரியுடன் இணைக்கும் முக்கிய சாலையாக (மா.நெ.49) உள்ளது.

மேலும், தகவல் தொழில்நுட்பத் துறையின் அதிவேக வளர்ச்சி மற்றும் பெருகி வரும் அடுக்குமாடி கட்டிடங்களின் எண்ணிக்கை ஆகியவை இவ்வழித்தடத்தில் வாகனப்போக்குவரத்து எண்ணிக்கை மிகவும் அதிகமாகி உள்ளது. இச்சாலையினை ஆறுவழித் தடமாக அகலப்படுத்துவதால் பெரும் வாகன நெரிசல் குறையும்.

மேற்கண்ட பணியானது, கிழக்குக் கடற்கரைச் சாலையில் திருவான்மியூரில் தொடங்கி, அக்கரை வரை, 8.80 கி.மீ. நீளத்திற்கு நடைபெற்று வருகிறது.

இச்சாலையை, திருவான்மியூர் முதல் அக்கரை வரை ஆறுவழித் தடமாக அகலப்படுத்த நிலஎடுப்புப் பணிக்கு, ரூ.940 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் அரசு வழங்கியுள்ளது என்று தெரிவித்த அமைச்சர்,

திருவான்மியூர், கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம் மற்றும் சோழிங்கநல்லூார் ஆகிய ஆறு கிராமங்களில் நில எடுப்புப் பணி 15 பகுதிகளாக பிரிக்கப்பட்டு, இழப்பீட்டுத்தொகை வழங்கப்பட்டு வருகிறது எனவும் தெரிவித்தார்.

இச்சாலை விரிவாக்கப் பணியானது, திருவான்மியூர், கொட்டிவாக்கம், பாலவாக்கம் மற்றும் நீலாங்கரை முதல் அக்கரை வரை என 4 கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு கொட்டிவாக்கம், பாலவாக்கம் மற்றும் நீலாங்கரை முதல் அக்கரை வரை 3 கட்டங்களாகப் பணிகள் நடைபெற்று வருகிறது.

கிழக்குக் கடற்கரைச் சாலையை ஆறுவழித் தடமாக அகலப்படுத்துவதற்கு கொட்டிவாக்கம் பகுதியில் ரூ.19 கோடி மதிப்பீட்டிலும், பாலவாக்கம் பகுதியில் ரூ.18 கோடி மதிப்பீட்டிலும், நீலாங்கரை, ஈஞ்சம்பாக்கம் மற்றும் சோழிங்கநல்லூார் பகுதிகளில் ரூ.135 கோடி மதிப்பீட்டிலும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் 11.04.2025இல் முடிவுடையும் என்று தெரிவித்தார்.

இப்பணியில் சாலையின் மையத்தில் 1.2 மீட்டர் அகலத்திற்கு மைய தடுப்புச் சுவர், தடுப்புச் சுவரின் இருபுறமும் 11 மீட்டர் அகலத்திற்கு தார் தளம், 1.65 மீட்டர் அகலத்திற்கு பேவர் பிளாக் தளம் மற்றும் 2 மீட்டர் அகலத்திற்கு மழைநீர் வடிக்கால்வாய் மற்றும் நடைபாதை அமைக்கப்பட உள்ளது.

நிலஎடுப்பு செய்த இடங்களில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் முடிவுற்ற இடங்களில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பயன்பாட்டு உபகரணங்களை மாற்றி அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

மின்சார உபகரணங்கள் மாற்றி அமைக்கப்பட்டவுடன், சென்னை குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் குடிநீர் குழாய் மற்றும் பாதாள கழிவு நீர் குழாய்கள் பதிக்கும் பணிகள் இருபுறமும் நடைபெறும் என்று தெரிவித்தார்.

இத்திட்டங்களை விரைவாகவும், தரத்துடனும் செயல்படுத்தி முடித்து, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டு வருவதற்கு உரிய நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் எடுக்குமாறு அறிவுரைகள் வழங்கினார்.

### முதல்வரின் சாதனைகளை பொறுத்துக் கொள்ள முடியாமல்

## காந்தாரி போல கதறுகிறார் எடப்பாடி பழனிசாமி!

### ஆ.ராசா கண்டன அறிக்கை!



சென்னை, ஆக. 21 -

கலைஞரை இந்திய ஒன்றியமே கொண்டாடுவதையும், முதல்வரின் சாதனைகளை பொறுத்துக்கொள்ள முடியாமலும் காந்தாரி போல எடப்பாடி பழனிசாமி கதறுகிறார் என ஆ.ராசா கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தி.மு.க. துணை பொதுச் செயலாளரும், எம்.பி.யுமான ஆ.ராசா வெளியிட்ட அறிக்கை வருமாறு:-

கலைஞரின்நூற்றாண்டை சிறப்பிக்கும்வகையில்இந்திய ஒன்றிய அரசு 100 ரூபாய் நாணயம் வெளியிட்டு சிறப்பித்திருக்கிறது. இந்தியாவில் நாணயம் மற்றும் ரூபாய் நோட்டுகளை வெளியிடுவது ஒன்றிய அரசுதான் என்பதால், ஒன்றிய அரசில் பாதுகாப்புத்துறை அமைச்சராக உள்ள ராஜ்நாத்சிங் கலந்து கொண்டு சிறப்பிப்பதில் என்ன பிரச்சினை எடப்பாடி பழனிசாமிக்கு.

**பழனிசாமியை எந்த லிஸ்ட்டில் சேர்ப்பது!**

கலைஞரின் உருவம் பொறித்த நாணயத்தில் இந்தி எழுத்து ஏன் இருக்கிறது என்று எடப்பாடி பழனிசாமி கேட்பதால் அவருக்கு என்ன ஆச்சு என்ற கவலை மேலும் அதிகரிக்கிறது.

இந்தியாவில் உள்ள நாணயங்கள் எதுவாக இருந்தாலும் அதில் ஆங்கிலமும் இந்தியும் இருப்பது வழக்கம். அ.தி.மு.க.வை உருவாக்கிய எம்.ஜி.ஆர். அவர்களுக்கு நாணயம் வெளியிடப்பட்டிருப்பதையும் அதிலும் இந்தி எழுத்துகள் இருப்பதையும் கூடவா எடப்பாடி பழனிசாமி அறியவில்லை. கலைஞர் நாணயத்தில்தான் ‘தமிழ் வெல்லும்’ என்ற எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளது. இதைக்கூட உணராமல் எடப்பாடி பழனிசாமி உளறியிருப்பதால் அவரை எந்த லிஸ்ட்டில் சேர்ப்பது எனப் புரியவில்லை.

எதையாவது சொல்ல வேண்டும் என்பதற்காக, தமிழ்நாடு அரசின் சார்பில் கலைஞருக்கு நிறுவப்பட்ட சிலையை, பா.ஜ.தலைவராக ஒருகாலத்தில் இருந்த இந்திய குடியரசு துணைத் தலைவர் வெங்கையா நாயுடு திறந்து வைத்ததை இப்போது விமர்சிக்கிற எடப்பாடி பழனிசாமி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அண்ணா அறிவாலயத்தில் நிறுவப்பட்ட கலைஞர் சிலையைத் திறந்து வைத்தது காங்கிரஸ் தலைவராக இருந்த அன்னை சோனியா காந்திதான் என்பதையாவது அறிவாரா.

**பதற்றத்தில் பிதற்றும் பழனிசாமி!**

உறவுக்கு கை கொடுப்போம் உரிமைக்கு குரல் கொடுப்போம் என்பதே கலைஞர் எங்களுக்கு கற்றுத் தந்திருக்கும் அரசியல் இலக்கணம். அந்த வகையில்தான் ஒன்றிய அரசின் நாணயம் வெளியீட்டு விழாவும், ஆளுநரின் தேநீர் விருந்தும் நடைபெற்றது. தி.மு.க மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில், தமிழ்நாட்டிற்குரிய நிதியை வழங்காமலும் தமிழ்நாட்டிற்கானத் திட்டங்களை செயல்படுத்தாமலும் வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ. அரசைக் கண்டித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை எதிர்க்கட்சித் தலைவர் ஒருமுறையாவது படித்துப் பார்க்கட்டும்.

பா.ஜ.வை எப்படியாவது தமிழ்நாட்டில் வளரச் செய்ய வேண்டும் என்று சொந்தக்கட்சியான அ.தி. மு.க.வையே அழித்துக்கொண்டிருக்கிறார் என்று அவரது கட்சித் தொண்டர்களே குமுறுகின்ற நிலையை மறைப்பதற்கு, தி.மு.க. மீது பழி போட்டுத் திசை திருப்ப நினைக்கும் எடப்பாடி பழனிசாமியின் நாடகத்தை பொதுமக்கள் நம்பமாட்டார்கள். அத்திக்கடவு - அவினாசி திட்டம் என்பது மேற்கு மாவட்ட மக்களின் நெடுங்கனவு. அதனை 1972ம் ஆண்டில் முதன்முதலில் செயல்படுத்த முனைந்தவர் கலைஞர்.

அதன் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும், ஒவ்வொரு முறையும் தி.மு.க. ஆட்சி அமைந்தபோது மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகளையும், எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க. ஆட்சியில் அந்தத்திட்டம் எப்படி செயல்படுத்தப்பட்டது என்பதை மேற்கு மாவட்ட மக்கள் அறிவார்கள். முதல்வர் தலைமையிலான அரசுதான் உறுதியான நடவடிக்கைகள் மூலம் அத்திக்கடவு-அவிநாசி திட்டத்தை நிறைவேற்றியுள்ளது.

கலைஞரை இந்திய ஒன்றியமே கொண்டாடுவதையும், மேற்கு மாவட்ட மக்களின் நெடுங்காலக் கனவை திராவிட மாடல் அரசு நிறைவேற்றியிருப்பதையும் பொறுத்துக் கொள்ள முடியாமல் ‘காந்தாரி’ போலக் கதறுகிறார் எடப்பாடி பழனிசாமி. பதற்றத்தில் அவர் பேசுவதெல்லாம் பிதற்றலாக உள்ளது.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.



இந்த ஆண்டின் சிறந்த நகராட்சியாக திருவாரூர் நகராட்சியை தெரிவுசெய்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்ட விருதுடன், நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களை, திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில், திருவாரூர் நகர்மன்றத் தலைவர் புவனப்ரியா செந்தில், துணைத் தலைவர் அகிலா சந்திரசேகர் ஆகியோர் நகர்மன்ற உறுப்பினர்களுடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். நகரச் செயலாளர் வாரை எஸ்.பிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில், திட்டக்குழு உறுப்பினர் இரா.சங்கர், நகர பொருளாளர் ரஜினி சின்னா, எஸ்.என்.அசோகன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.